RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 135 | மே.23 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# தமிழகத்தில் ஜூன் 18ல் மாநிலங்களவை இடைத்தேர்தல்: தேர்தல் ஆணையம் அறிவிப்பு

சென்னை: மே.23-

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள ஒரு மாநிலங்களவை இடத்துக்கான இடைத்தேர்தல் ஜூன் 18 ஆம் தேதி நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் மயிலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சி.வி.சண்முகம், தனது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை முறைப்படி ராஜினாமா செய்தார்.

இந்த நிலையில், தமிழ்நாட்டின் ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி காலியானதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, ஜூன் 18 ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும். ஜூன் 1 ஆம் தேதி வேட்புமனுத் தாக்கல் தொடங்குகிறது. ஜூன் 11 வேட்புமனுவை திரும்பப் பெற கடைசி நாளாகும். ஒருவருக்கு மேல் போட்டியிடும் பட்சத்தில், ஜூன் 18 ஆம் தேதி வாக்குப்பதிவு நடத்தப்பட்டு, அன்று மாலையே முடிவுகள் அறிவிக்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 10 மாநிலங்களில் உள்ள தற்போதைய உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைய இருப்பதால், 24 இடங்கள் காலியாகின்றன. அதோடு, மகாராஷ்டிராவிலும் மாநிலங்களவை பதவியை தேசியவாத காங்கிரஸ் தலைவர் சுனேத்ரா அஜித் பவார் ராஜினாமா செய்திருந்தார். இந்த காலியிடங்களுக்கும் ஜூன் 18 இடைத்தேர்தல் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.




## மேகேதாட்டு அணை விவகாரம்: தவெக அரசின் நிலைப்பாட்டை விளக்க எடப்பாடி பழனிசாமி கோரிக்கை

சென்னை: மே.23-

மேகேதாட்டு அணை விவகாரத்தில் கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை தவெக அரசு உடனடியாக எடுப்பதுடன், அரசின் தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று அதிமுக பொதுசெயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்: "மேகேதாட்டு அணை கட்டுவதை எதிர்க்க தமிழகத்திற்கு உரிமை இல்லை" என்று கர்நாடக மாநில துணை முதல்வர் டி.கே. சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

காவிரியில் தமிழகத்தின் உரிமையை மழுங்கடிக்கும் வகையில் கர்நாடக காங்கிரஸ் அரசு செயல்படுவதும், அதை தமிழகத்தில் உள்ள அரசு கைகட்டி வேடிக்கை பார்ப்பதும், ஆட்சி மாறினும் மாறாத காட்சியாகவே உள்ளது.

தமிழ்நாட்டை தற்போது ஆண்டுவரும் அரசு, காங்கிரஸ் தயவில் உள்ள தமிழக வெற்றிக் கழகம் பொய்க்கால் குதிரை அரசாக செயல்படுவதால், கர்நாடக காங்கிரஸ் கட்சியை எதிர்த்து "திடமான" நிலைப்பாடு எடுத்து பேச முடியுமா ?

மேகேதாட்டில் பூமி பூஜை வரை பேசுவதற்கு கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு எங்கிருந்து தைரியம் வருகிறது ? தங்களால் ஆட்டுவிக்கப்படும் அரசு தான் தமிழ்நாட்டில் உள்ளது என்ற எண்ணமா ? காங்கிரஸ் தொடர்ந்து தமிழகத்திற்கு எதிராக செயல்படுவது கடும் கண்டனத்திற்குரியது.

காவிரி நதிநீர் என்பது தமிழ்நாட்டின் ஜீவாதாரம் ஆகும். டெல்டா உள்ளிட்ட பல மாவட்ட விவசாயிகள் மட்டுமின்றி 20 மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும் காவிரியாறு விளங்கி வருகிறது. மேகேதாட்டில், காவிரியின் குறுக்கே அணை கட்டினால் டெல்டா மாவட்டங்கள் பாலைவனமாகிவிடும். காவிரி தொடர்பாக தமிழகத்தின் உரிமை விட்டுக் கொடுக்கப்படுவதை அ.இ.அதிமுக ஒரு நாளும் அனுமதிக்காது.

கர்நாடக துணை முதல்வரின் இப்பேச்சு தமிழக விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இடையே மிகப் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்விவகாரத்தில் கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்த அரசு உடனடியாக எடுப்பதுடன், அரசின் தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

## "பதவிக்காக தவெக அரசை ஆதரிக்கவில்லை" எஸ்.பி.வேலுமணி விளக்கம்

சென்னை: மே.22-

"எங்களுக்கு எடப்பாடி பழனிசாமிதான் பொதுச்செயலாளர், கட்சியை பலப்படுத்த வேண்டும் என்றே கோரினோம். அதிமுகவில் பிளவு இல்லை; கருத்து வேறுபாடுதான் உள்ளது" என முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தவெக அமைச்சர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். அமைச்சர் பதவிக்காக நாங்கள் தவெக அரசுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. அமைச்சர் பதவி கேட்டதாக எங்கள் தரப்பிலோ, தவெக தரப்பிலோ இதுவரை கூறவில்லை.

மக்கள் தவெகவுக்கு ஆதரவு கொடுத்துள்ளனர். திமுக எதிர்ப்பை எப்போதும் முன்வைக்கும் கட்சி அதிமுக. தவெகவும் திமுக எதிர்ப்பை தான் முன்வைத்தது. அதோடு, அதிமுக கொண்டுவந்த திட்டங்கள் தொடர வேண்டும்.

மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்ற விரிவான ஆரோக்கியமான கோரிக்கைகளுடன்தான் தவெக அரசுக்கு ஆதரவளித்தோம். இதை சட்டமன்றத்திலும் தெளிவுபடுத்திவிட்டோம். எங்களுக்கு எடப்பாடி பழனிசாமிதான் பொதுச்செயலாளர், கட்சியை பலப்படுத்த வேண்டும் என்றே கோரினோம். அதிமுகவில் பிளவு இல்லை; கருத்து வேறுபாடுதான் உள்ளது.

ஆனால் எங்களைப் பற்றி தவறாக எழுதி பெரும் குழப்பத்தை சிலர் விளைவிக்கின்றனர். அதிமுக தோல்வியை சந்தித்துள்ளது. அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். இது தொடர்பாக பொதுக்குழுவை நடத்தி விவாதிப்போம். அதிமுகவை உடைக்கும், பிரிக்கும் எண்ணமோ எங்களுக்கு இல்லை. அம்மாவின் ஆட்சி மீண்டும் தமிழகத்தில் அமைய வேண்டும். கட்சி எங்களின் உயிர் மூச்சு. தவறான செய்திகளை பரப்பாதீர்கள்" என்றார்.

## த.வெ.க. அரசில் அமைச்சர்களாக வன்னி அரசு, ஷாஜகான் பதவியேற்பு

சென்னை: மே.23-

தமிழக முதல்வர் விஜய் தலைமையிலான அமைச்சரவையில் இணைந்து கொண்ட விசிகவின் வன்னியரசுக்கும், ஐயூஎம்எல் கட்சியின் ஷாஜஹானுக்கும் துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதன்படி வன்னியரசு சமூகநீதித் துறை அமைச்சரானார். இந்தத் துறையின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் அடங்கும்.

ஏ.எம்.ஷாஜஹான் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சரானார். அவரது துறையின் கீழ் சிறுபான்மையினர் நலன் மற்றும் வக்பு வாரியம் அடங்கும்.





முன்னதாக, இன்று காலை ஆளுநர் மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் முதல்வர் விஜய் தலைமையிலான அமைச்சரவையில், விசிகவின் வன்னியரசு, ஐயூஎம்எல் கட்சியின் ஷாஜஹானுக்கு அமைச்சர்களாக, ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். வன்னியரசு திண்டிவனம் தொகுதியிலும், ஷாஜஹான் பாபநாசம் தொகுதியில் வெற்றி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் விஜய் தலைமையிலான தவெக 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக ஆட்சியமைக்க உரிமை கோரியது. ஆட்சியமைக்கத் தேவையான 118 இடங்களுக்காக, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஆகிய கட்சிகளின் ஆதரவைப் பெற்றது. முதல்வராக விஜய் கடந்த 10ம் தேதி பொறுப்பேற்றார்.

இந்நிலையில் அமைச்சரவையில் விசிகவும், ஐயூஎம்எல் கட்சியும் இடம்பெற வேண்டும் என்று தவெக அழைப்புவிடுத்தது. அதைப் பரிசீலித்த இரண்டு கட்சிகளும் தங்களது விருப்பத்தைத் தெரிவிக்க, வன்னியரசும், ஷாஜஹானும் அமைச்சர்களாகி இருக்கின்றனர்.

முன்னதாக நேற்று, செய்தியாளர்களிடம் பேசிய வன்னி அரசு, ' என்னை நம்பி இந்த பெரிய பொறுப்பை வழங்கிய திருமாவளவனுக்கு நன்றி. சாதி ஒழிப்பும், தமிழ்த் தேசியமும் விசிகவின் கொள்கை. ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என்ற முழக்கத்தை முதன்முதலில் முன்வைத்தவர் திருமாவளவன். அவர் சொன்னது இப்போது நிறைவேறுகிறது. ஆட்சியில் பங்கு என்பது, ஜனநாயகத்தை, அதிகாரப் பகிர்வை விரும்புகிற அனைவருக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்.

தவெக அமைச்சரவையில் இணையுமாறு அழைத்தார்கள், நாங்கள் இணைந்துள்ளோம். எல்லா பூட்டுகளுக்கும் சாவி அதிகாரம் தான் என அம்பேத்கர் சொல்லியுள்ளார். இப்போது அம்பேத்கரின் கனவு நோக்கி நாங்கள் நகர்கிறோம். தமிழகத்தில் விசிக தான் மையம் என்பதை எங்கள் தலைவர் நிரூபித்துள்ளார். அமைச்சர் பதவியில் மக்கள் பாராட்டும்படி, நேர்மையான வகையில் செயல்படுவோம்" எனத் தெரிவித்தது இங்கே மேற்கோள்காட்டத் தக்கது.

## "யாரையும் புண்படுத்தும்படி கடுஞ்சொற்களைப் பேச வேண்டாம்" : திமுகவினருக்கு மு.க.ஸ்டாலின் அறிவுரை

சென்னை: மே.23-

தமிழக அமைச்சர்களாக நேற்று பதவியேற்ற விசிக எம்எல்ஏ வன்னியரசுக்கும், ஐயூஎம்எல்ஏ ஷாஜஹானுக்கும் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். கூடவே, அவர்கள் தவெக அமைச்சரவையில் இடம்பெற்றது குறித்து கடுஞ் சொற்களால் விமர்சிக்க வேண்டாம் என்று திமுகவினருக்கு ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுள்ள நம் கொள்கைத் தோழமைகள் வன்னியரசுக்கும், ஷாஜஹானுக்கும் எனது வாழ்த்துகள்!

தங்களது அரசியல் முடிவைத் தீர்மானிக்கும் உரிமை எந்தக் கட்சிக்கும் உண்டு. எனவே திமுகவினர் இந்த நேரத்தில் யாரையும் புண்படுத்தும்படி கடுஞ் சொற்களைப் பேச வேண்டாம் என்பதுதான் உங்கள் தலைவராக எனது அன்பு வேண்டுகோள்.

அண்ணா வழியிலும், கலைஞர் வழியிலும் வந்தவர்கள் நாம். அதை மறந்திட வேண்டாம். நல்லதைப் பாராட்டி, அல்லதை விமர்சிக்கும் ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்." என்று ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் விஜய் தலைமையிலான தவெக 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக ஆட்சியமைக்க உரிமை கோரியது. ஆட்சியமைக்கத் தேவையான 118 இடங்களுக்காக, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஆகிய கட்சிகளின் ஆதரவைப் பெற்றது.

ஆரம்பத்தில் விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) கட்சிகள் வெளியில் இருந்து ஆதரவு என்று அறிவித்த நிலையில் தவெகவின், முதல்வர் விஜய்யின் கோரிக்கைகளை ஏற்று இரண்டு கட்சிகளும் அமைச்சரவையில் இணைந்தன.

இதனையடுத்து, விசிகவின் வன்னியரசு, ஐயூஎம்எல் கட்சியின் ஷாஜஹானுக்கு அமைச்சர்களாக, இன்று ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இவர்களுக்கான இலாகாவும் ஒதுக்கப்பட்டது. அதன்படி, ஐயூஎம்எல் கட்சியின் ஷாஜஹான் சிறுபான்மை நலத்துறை அமைச்சராகவும், விசிகவின் வன்னியரசு சமூகநீதித் துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தவெக அமைச்சரவையில் விசிக, ஐயூஎம்எல் இடம்பெறும் என்ற அறிவிப்பு நேற்று வெளியான நிலையில் நேற்று பின்னிரவில் திமுக எம்.பி. ஆ.ராசா ஒரு ட்வீட்டை பதிவு செய்து பின்னர் அதை நீக்கினார். இருப்பினும் அதன் ஸ்க்ரீன்ஷாட்கள் இணையத்தில் உலாவி திமுகவுக்கு வசைகளைப் பெற்றுத் தந்து கொண்டிருக்கின்றன. தொடர்ந்து இன்று காலையில் மற்றுமொரு ட்வீட்டையும் அவர் பதிவு செய்தார்.

இந்தச் சூழலில்தான் திமுக தலைவர் ஸ்டாலின் விசிக, ஐயூஎம்எல் கட்சிகளை கொள்கை தோழனை என்று அழைத்ததோடு, "யாரையும் புண்படுத்தும்படி கடுஞ் சொற்களைப் பேச வேண்டாம்" என்றும் வலியுறுத்தியுள்ளார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நகராட்சி ஆணையாளர்களுடனானஆய்வுக்கூட்டம்



உதகை மே,23-
நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், குடிநீர் வழங்கல் மற்றும் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பாக, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில், நகராட்சி ஆணையாளர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் , கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட பணிகள், தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் குறித்தும், அம்ருத் திட்டம், சாலை பணிகள், உள்ளிட்ட பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டு நடைபெற்று வரும் பணிகளை விரைவாக முடித்திட வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், ஒவ்வொரு வார்டுகளுக்கும் வழங்கப்பட்டு வரும் குடிநீர் தொடர்பாக கேட்டறிந்த, மாவட்ட ஆட்சித்தலைவர் நகராட்சியில் உள்ள அம்மா உணவத்தில் தயாரிக்கப்படும் உணவின் தரத்தினை ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனவும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகராட்சி மூலம் வீடுவீடாக குப்பைகளை சேகரிக்கும் பணிகளின் செயல்பாடுகள் குறித்தும் சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்தார். இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) வாணி, நகராட்சி ஆணையாளர்கள்
நித்யா (உதகை), கிருஷ்ணராம் (குன்னூர்), சக்திவேல் (நெல்லியாளம்), ஜெயகுருநாதன் (கோத்தகிரி), கூடலூர் நகராட்சி பொறியாளர் தியாகராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்டம்மாவட்டத்தில் நடைபெற்றுவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளைமாவட்டஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத்சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்



தேனி மே 23-
தேனி மாவட்டம், நகராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தேனி மாவட்டத்தில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் குடிநீர் திட்டப்பணிகள், சுகாதாரப்பணிகள், சாலைப்பணிகள், உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், தேனி அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வேளாண் விளைப்பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்க நியாயவிலைக்கடையில் நடப்பு மாதம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை, பொருட்களின் இருப்பு, அரிசி மற்றும் பொருட்களின் தரம், எடை அளவிடும் கருவிகளின் செயல்பாடுகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து, தேனிஅல்லி நகரம் நகராட்சியில் விடுபட்ட மற்றும் விரிவுபடுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் ரூ.67 கோடி மதிப்பீட்டில் 53 கி.மீ. தூரத்திற்கு கழிவுநீர் குழாய் அமைத்தல், 1,904 இயந்திரக் குழிகள் அமைத்தல், 13,862 வீடுகளுக்கான கழிவுநீர் இணைப்புகள் அமைத்தல், 13 இடங்களில் கழிவுநீர் உந்து நிலையம் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருவதையும், ரூ.8.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் தினசரி சந்தை கட்டுமானப்பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் தேனி ஊராட்சி ஒன்றியம் அரண்மனைப்புதூர் ஊராட்சிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.2.45 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள வகுப்பறை கட்டடத்தினையும், சிவலிங்கநா யக்கன்பட்டி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதித்திட்டத்தின் கீழ்
ரூ.19 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மையம் கட்டுமானப் பணிகளையும், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கனவு இல்லம் கட்டுமானப் பணிகளையும், பாலகிருஷ்ணாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடத்தினையும், தொடர்ந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மற்றும் வனத்துறையின் சார்பில் பராமரிக்கப்பட்டு வரும் நாற்றாங்கால் பண்ணையையும், கோவிந்தநகரம் பகுதியில் ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.
பணிகளை அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து பயன்பாட்டுக்கு கொண்டுவர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். இவ்வாய்வில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தமிழரசி, செயற்பொறியாளர் சுந்தரேஷ்வரன், நகராட்சி ஆணையாளர் (தேனி அல்லிநகரம்) செல்வி பார்கவி, நகராட்சிப் பொறியாளர் குணசேகரன், உதவிப்பொறியாளர்கள் சுபாபிரகதீஸ்வரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவிச்சந்திரன், சரவணன் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



# பாடியநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளி 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 83 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே 23-
மாதவரம் தொகுதி பாடியநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 289 மாணவ மாணவிகள் தேர்வு எழுதினர். அதில் 83 சதவீதம் பெற்று 240 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்று உள்ளனர்.475 மதிப்பெண்கள் பெற்று லோகேஷ் முதலிடமும், 466 மதிப்பெண்கள் பெற்று ஷாலினி இரண்டாமிடமும், 461 மதிப்பெண்கள் பெற்று சில்வியா மூன்றாமிடமும் பெற்றுள்ளனர்.10ம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவ மாணவிகளையும் வெகுவாக பாராட்டி தலைமை ஆசிரியர் லலிதா, உதவி தலைமை ஆசிரியர் உமாராணி மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் உள்ளிட்ட சக ஆசிரியர்கள் வாழ்த்தினர்.



■ நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே காட்டேரி பூங்காவில் தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை சார்பில் 2 வது மலைப்பயிர்கள் காட்சியில் உதகை சட்டமன்ற உறுப்பினர் போஜராஜன் கலந்து கொண்டு பார்வையிட்டார்



# ஆசாரிப்பள்ளம் பெல்ஃபீல்டு மெட்ரிக் மேல்நிலை பள்ளியில் 100% தேர்ச்சி

## 494 மதிப்பெண் பெற்று மாணவிகள் முன்னிலை

கன்னியாகுமரி, மே 23-
கன்னியாகுமரி மாவட்டத்தில் வெளியான 10ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவில், ஆசாரிப்பள்ளம் பெல்ஃபீல்டு மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகள் சிறப்பான தேர்ச்சி பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.இந்த ஆண்டு தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களும் வெற்றி பெற்று 100 சதவீத தேர்ச்சியை பதிவு செய்துள்ளனர். பள்ளியின் முதல் மூன்று இடங்களையும் மாணவிகள் கைப்பற்றியுள்ளனர். முதல் மதிப்பெண் வி. கேத்தரின் அஸ்லின் – 494 / 500இனிய மதிப்பெண்ந P.V. ஸ்ரீவிகா – 493 / 500 மூன்றாம் மதிப்பெண் L.P. அஸ்மி ஜோனா – 491 / 500மேலும், 450க்கு மேல் 46 மாணவர்களும், 400க்கு மேல் 85 மாணவர்களும் மதிப்பெண்கள் பெற்று கல்வித் திறமையை வெளிப்படுத்தியுள்ளனர்.இந்த சிறப்பான வெற்றிக்கு பள்ளி தாளாளர் G. ரஸ்கின் ராய், பள்ளி முதல்வர் T. ஜேன் கேத்ரின் ரஸ்கின், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மாணவர்களை பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.மாணவர்களின் தொடர்ந்து செய்யப்பட்ட முயற்சியும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு பயிற்சியும் இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளதாக பள்ளி நிர்வாகம் தெரிவித்துள்ளது.




# தாராபுரம் அம்மன் ஆட்டோ மற்றும் மீனாட்சி மோட்டார்ஸ் இணைந்து நடத்திய முப்பெரும் விழா

திருப்பூர்மே 23-
திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் அம்மன் ஆட்டோ மற்றும் மீனாட்சி மோட்டார்ஸ் இணைந்து நடத்திய முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவின் தொடக்கமாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. இதில் 150க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர். மேலும் புதிய வாகனங்களான படா தோஸ்த் வீ6” மற்றும் தோஸ்த் பெட்ரோல் சிழிநி வாகனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
அசோக் லேலண்ட் நிறுவனத்தின் டெரிட்டரி மேனேஜர் ஜெகதீஷ் அவர்கள் புதிய வாகனங்களின் சிறப்பம்சங்களை விளக்கி உரையாற்றினார்.இந்த நிகழ்ச்சியில் அம்மன் ஆட்டோ நிறுவன இயக்குநர் சங்கர் மீனாட்சி மோட்டார்ஸ் பங்குதாரர்கள் திருஞானம் மற்றும் சுவாமிநாதன் அசோக் லேலண்ட் நிறுவனத்தின் டெரிட்டரி மேனேஜர் ஜெகதீஷ், அம்மன் ஆட்டோ நிறுவனத்தின் ஏஜிஎம் செழியன், தாராபுரம் கிளை மேலாளர்கள் பெரோஸ், அலெக்ஸ், எழில், சுபாஷ் உள்ளிட்டோர் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



# சோழவரம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 97 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே 23-
மாதவரம் தொகுதி சோழவரம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 92 மாணவிகள் தேர்வு எழுதினர். அதில் 97 சதவீதம் பெற்று 89 மாணவிகள் தேர்ச்சி பெற்று உள்ளனர்.486 மதிப்பெண்கள் பெற்று சரஸ்வதி முதலிடமும், 485 மதிப்பெண்கள் பெற்று லித்திஷா இரண்டாமிடமும், 484 மதிப்பெண்கள் பெற்று ஜோஸிதா மூன்றாமிடமும் பெற்றுள்ளனர்.10ம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவிகளையும் வெகுவாக பாராட்டி தலைமை ஆசிரியர் மா.முத்துச்செல்வி, உதவி தலைமை ஆசிரியர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் உள்ளிட்ட சக ஆசிரியர்கள் வாழ்த்தினர்.

# சிவகங்கையில் வரும் 29ந் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

சிவகங்கை, மே,23-
சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், வருகின்ற 29. 5. 2026 (வெள்ளிக்கிழமை) அன்று முற்பகல் 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த கோரிக்கைகளைத் தெரிவித்துஅதனை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.






# இலாஹி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி

மாதவரம் , மே 23-
மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி திருவிக தெருவில் அமைந்துள்ள இலாஹி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 30 மாணவர்கள் தேர்வு எழுதினர். அதில் 100 சதவீதம் பெற்று 30 மாணவர்கள் தேர்ச்சி பெற்று உள்ளனர்.492 மதிப்பெண்கள் பெற்று எம்.தர்ஷினி முதலிடமும், 478 மதிப்பெண்கள் பெற்று பி.நிலாபர்வீன் இரண்டாமிடமும், 463 மதிப்பெண்கள் பெற்று கே.மாதேஷ் மூன்றாமிடமும் பெற்றுள்ளனர். 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களையும் வெகுவாக பாராட்டி பள்ளி தாளாளரும் தலைமை ஆசிரியருமான மௌலவி முனைவர் ஏ.காஜாமுஹ்யீனுத்தீன் ஜமாலி உள்ளிட்ட ஆசிரிய ஆசிரியைகள் வாழ்த்தினர்.



# பம்மதுகுளம் அரசு மேல்நிலைப்பள்ளி 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 94.35 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே 23-
மாதவரம் தொகுதி பம்மதுகுளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 123 மாணவ மாணவிகள் தேர்வு எழுதினர். அதில் 94.35 சதவீதம் பெற்று 116 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்று உள்ளனர்.
471 மதிப்பெண்கள் பெற்று சுகிர்தா முதலிடமும், 470 மதிப்பெண்கள் பெற்று லுபைனா ஃபாத்திமா இரண்டாமிடமும், 466 மதிப்பெண்கள் பெற்று ஷாரூன் கிருத்தி, தக்ஷின் ஆகியோர் மூன்றாமிடமும் பெற்றுள்ளனர்.10ம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவ மாணவிகளையும் வெகுவாக பாராட்டி தலைமை ஆசிரியர் புஷ்பலதா, உதவி தலைமை ஆசிரியர் பிரேமா மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் உள்ளிட்ட சக ஆசிரியர்கள் வாழ்த்தினர்.



■ தமிழ்நாடு மனிதவள மேம்பாட்டு மற்றும் ஓய்வு பெற்ற ராணுவ வீரர் நலன் துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் த.சரத்குமார் அவர்கள் முதலமைச்சர் சி.ஜோசப் விஜய்யை நேரில் சந்தித்து பூங்கொத்து கொடுத்து நன்றி தெரிவித்து வாழ்த்துக்கள் பெற்றார்



# சோழவரம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 80 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே 23-

மாதவரம் தொகுதி சோழவரம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 45 மாணவர்கள் தேர்வு எழுதினர். அதில் 80 சதவீதம் பெற்று 33 மாணவர்கள் தேர்ச்சி பெற்று உள்ளனர்.450 மதிப்பெண்கள் பெற்று நேத்ரன் முதலிடமும், 417 மதிப்பெண்கள் பெற்று ரோகித் இரண்டாமிடமும், 408 மதிப்பெண்கள் பெற்று லிசிகேஷ் மூன்றாமிடமும் பெற்றுள்ளனர்.10ம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களையும் வெகுவாக பாராட்டி தலைமை ஆசிரியர் லீலாவதி, உதவி தலைமை ஆசிரியர் ஷியாமளா மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் உள்ளிட்ட சக ஆசிரியர்கள் வாழ்த்தினர்.

# பொழிச்சலூர் பகுதியில் மே 17 அன்று சதீஷ் பிரதர் நடத்திய இரண்டாம் ஆண்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது






பொழிச்சலூர் மே 23-

செங்கல்பட்டு மாவட்டம் புனித தோமையார் மலை ஒன்றியத்துக்குட்பட்ட பொழிச்சலூர் பகுதியில் மே 17 அன்று சதீஷ் பிரதர் நடத்திய இரண்டாம் ஆண்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது இந்த போட்டிக்கு பல்வேறு இடத்திலிருந்து அணிகள் கலந்து கொண்டனர், இதில் தமிழக வெற்றிக் கழகத்தின் பொழிச்சலூர் ஊராட்சி கழகச் செயலாளர் ஜே.மணி ஜெய மோகன் அவர்கள் விளையாட்டை ஊக்குவிக்க வண்ணம் சதீஷ் பிரதர் நடத்திய கிரிக்கெட் போட்டிக்கு இரண்டாம் பரிசு வெற்றி பெற்ற அணிக்கு ரூபாய் 15 ஆயிரத்தை பரிசு தொகையாக அளித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பொழிச்சலூர் மேற்கு ஊராட்சி கிளை இணைச் செயலாளர் எஸ்.ஜான், செங்கல்பட்டு வடக்கு மாவட்ட மாணவரணி தலைமை எஸ்.பிரதீப், மாவட்ட மாணவரணி தலைமை எஸ்.அருண்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இதில் பொழிச்சலூர் ஊராட்சி கழகச் செயலாளர் ஜே.மணி ஜெயமோகன் அவர்கள் விளையாட்டு வீரர்களுக்கு தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக விளையாட்டு வீரர்களுக்கு எப்பேர்பட்ட உதவியாக இருந்தாலும் அனைத்து விதமான உதவியை தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக நான் செய்தித் தருவேன் என உறுதி அளித்தார்.

## செங்குன்றம் பாலவாயல் சிக்னல் சர்வீஸ் சாலை ஆக்கிரமிப்பு

# மாதவரம் சட்டமன்ற தவெக உறுப்பினர் எம்.எல்.விஜய்பிரபு நடவடிக்கை எடுப்பாரா? பொதுமக்கள் கோரிக்கை!





மாதவரம், மே.23-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் பாலவாயல் சிக்னல் கிணற்று கடை உணவகம் அருகே உள்ள சர்வீஸ் சாலையில் தேவாலையம், தனியார் பள்ளி மற்றும் தனியார் வங்கி உள்ளிட்ட வணிக வளாகங்கள் உள்ளது. தினந்தோறும் தேவாலையத்திற்கும், பள்ளிக்கும், வங்கிக்கும் மற்றும் வணிக வளாகத்திற்கும் இந்த சர்வீஸ் சாலை வழியாகத்தான் பொதுமக்கள் செல்லவேண்டும். இந்நிலையில் நீண்ட வருடங்களாக இந்த சர்வீஸ் சாலை ஓரமாக லாரிகள், கார்கள் மற்றும் வேன்கள் போன்ற வாகனங்கள் பழுதுபார்க்கும் ( மெக்கானிக் செட்) கடைகள் இயங்கிவருகிறது. இதனால் நாள்தோறும் 10 முதல் 30க்கும் மேற்பட்ட பழுதடைந்த லாரிகள், கார்கள் மற்றும் வேன்கள் மெக்கானிக் செட்டிற்கு வருகிறது. அந்த வாகனங்களை பழுதுபார்பதற்காக பொதுமக்கள் பயன்படுத்தும் சர்வீஸ் சாலையின் ஒருபுரமாக நிறுத்திவைத்து மெக்கானிக் கடை உரிமையாளர் மற்றும் மெக்கானிக் குழுவினர்கள் காலை மற்றும் மாலை நேரங்களில் வாகனங்களை பழுதுபார்கின்றனர். இதனால் தேவாலையங்களுக்கும், பள்ளிக்கும், வங்கிக்கும் மற்றும் வணிக வளாகத்திற்கும் விரைவாக பொதுமக்கள் செல்லமுடியவில்லை.மேலும் இந்த சர்வீஸ் சாலைவழியாக உயிர் காக்கும் 108 வாகனம் செல்வதற்கும் வழிஇல்லை.அதேபோல் அடிக்கடி விபத்துக்களும் நடைபெறுகிறது. மேலும் அதிகளவில் போக்குவரத்து நெரிச்சல் ஏற்படுகிறது. எனவே மாதவரம் தொகுதி மக்களால் தேர்ந்தெடுத்துள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் புதிய மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல்.விஜய்பிரபு உடனடியாக சம்பந்தப்பட்ட இடத்தை நேரில் சென்று பார்வையிட்டு போக்குவரத்துத்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளை சந்தித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சர்வீஸ் சாலையில் சென்று பாதிக்கப்பட்டுவரும் பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# கலைஞர்கள் விருதுகள் பெறுவதற்கான விண்ணப்பக்கலாம் : மாவட்ட ஆட்சியர் தகவல்



தேனி மே 23-

தமிழ்நாட்டின் கலைப் பண்புகளை மேம்படுத்தவும் பாதுகாக்கும் நோக்கிலும் கலைஞர்களின் கலைத்திறனை சிறப்பிக்கும் வகையிலும் கலை பண்பாட்டுத் துறையின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் செயல்படும் மாவட்டக் கலை மன்றங்களின் வாயிலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 2002 2003 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வயயி மற்றும் கலைப்புலமையின் அடிப்படையில் சிறந்த ஐந்து கலைஞர்களுக்கும், 2021 2022 ஆம் ஆண்டு முதல் 15 கலைஞர்களுக்கும் விருதுகள் வழங்கிட அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

அவ்வாணையின்படி இதுவரை தேனி மாவட்டத்தில் 20022003 ஆம் ஆண்டு முதல் 2023 2024 ஆம் ஆண்டு வரையில் 130 கலைஞர்களுக்கு கலை விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், 2025 2026 ஆம் ஆண்டுக்கான கலை விருதுகள் கலை பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கி வரும் தேனி மாவட்டக் கலை மன்றத்தின் வாயிலாக அம்மாவட்டத்தில் இயல், இசை, நாடகம் முதலிய கலைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கலைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் தேர்வாளர் குழு அமைக்கப்பட்டுள்ளது. எனவே, தேனி மாவட்டத்தைச் சேர்ந்த பாட்டு, பரதநாட்டியம், இராஜா ராணி ஆட்டம், கும்மி, கோலாட்டம், தேவராட்டம், தோல்பாவைக்கூத்து, பொம்மலாட்டம், நையாண்டி மேளம், கரகாட்டம், காவடி, பொய்க்கால் குதிரையாட்டம், மரக்கால் ஆட்டம், கோல்கால் ஆட்டம், கழியல் ஆட்டம், கணியான் கூத்து, ஓவியம், சிற்பம், புலியாட்டம், காளையாட்டம், மயிலாட்டம், ஆழியாட்டம், கைச்சிலம்பாட்டம், சிலம்பாட்டம்(வீரக்கலை) மற்றும் வில்லிசை முதலிய செவ்வியல் கலைகள் நாட்டுப்புறக் கலைகள் என அனைத்து வகை முத்தமிழ் கலைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் இவ்விருது பெற விண்ணப்பிக்கலாம்கலை விருதுகள் முறையே 18 வயதும் அதற்குட்பட்ட கலைஞர்களுக்கு கலை இளமணி விருதும், 19 முதல் 35 வயதிற்குட்பட்ட கலைஞர்களுக்கு கலை வளர்மணி விருதும், 36 முதல் 50 வயதிற்குட்பட்ட கலைஞர்களுக்கு கலை சுடர்மணி விருதும், 51 முதல் 65 வயதிற்குட்பட்ட கலைஞர்களுக்கு கலை நன்மணி விருதும், 66 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு கலை முதுமணி விருதும் என்ற நிலைகளில் விருதுகள் வழங்கப்படவுள்ளன. மேலும், வயது மற்றும் கலைப்புலமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் 30 சிறந்த கலைஞர்களுக்கு பொற்கிழி பட்டயம் மற்றும் பொன்னாடையும் வழங்கப்படும். தேனி மாவட்டத்தில் தேசிய விருதுகள், மாநில விருதுகள் (கலைமாமணி) மற்றும் ஏற்கனவே மாவட்டக் கலை மன்றத்தின் விருதுகளைப் பெற்ற கலைஞர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பம் செய்யக்கூடாது. இதற்கு முன்னர் மாவட்ட விருதுக்கு விண்ணப்பித்திருந்த கலைஞர்கள் 20252026 ஆம் ஆண்டு விருது தேர்விற்கு தங்களது ஒப்புதல் வழங்கிட வேண்டும்.

தேனி மாவட்டத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கலைஞர்கள் விருதுகள் பெறுவதற்கான விண்ணப்பத்துடன் வயதுச் சான்று, முகவரிச் சான்று, அடையாள அட்டை, ஆதார் அட்டை, பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம்(3) மற்றும் கலை அனுபவச் சான்றுகளின் நகல்களுடன் (தொலைப்பேசி எண்ணுடன்) உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம், பாரதி உலா முதல் தெரு, ரேஸ்கோர்ஸ் ரோடு, மதுரை 625002 என்ற முகவரிக்கு 31.05.2026 க்குள் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 0452 2566420, 9500277994, 9842596563 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்துக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத்சிங், தெரிவித்துள்ளார்.




■ மதுரை மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (UPSC) மூலம் 24.05.2026 அன்று நடைபெறவுள்ள குடிமைப்பணிகள் முதன்மைத் தேர்வு தொடர்பான முன்னேற்பாடு கூட்டம் நடைபெற்றது.




■ திருப்பத்தூர் மாவட்டம் கெஜல் நாயக்கன்பட்டி ஜோதி உயர்நிலைப் பள்ளி 20252026 ஆம் ஆண்டு கல்வி ஆண்டுக்கான பத்தாம் வகுப்பு தேர்வில் 100% தேர்ச்சி பெற்றுள்ளது. முதல் மதிப்பெண் ஆக வைத்தீஸ்வரன் 474 மதிப்பெண்ணும், இரண்டாம் மதிப்பெண் சுனில் பாரதி 472 மதிப்பெண்ணும், மூன்றாவது மதிப்பெண் ஜோபியா ஜோ 463 மதிப்பெண்ணும் பெற்று கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் ஜோதி கல்வி அறக்கட்டளையின் நன்றிகளை தெரிவித்தனர். ஜோதி கல்வி அறக்கட்டளையின் தலைவர் அன்பழகன், செயலாளர் கோவிந்தராஜ், பொருளாளர் மஞ்சுநாதன், ஜோதி கல்வி அறக்கட்டளை உறுப்பினர் கோபிநாதன் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் சுகுமார் ஆகியோர் அனைவருக்கும் தங்களுடைய வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துள்ளனர்.

# அம்பத்தூர் திருமுல்லைவாயல் பகுதியில் 8 கிலோ கஞ்சா கடத்தல் ஒருவர் கைது

மாதவரம், மே.23-

அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான போலீசார், திருமுல்லைவாயல் மீனாட்சி நகர் அருகே கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது, அங்கு சந்தேகத்திற்கிடமாக சுற்றித்திரிந்த அருள்(எ) அருண்குமார் (வ/23), த/பெ முகமது அலி, கல்யாணபுரம், அம்பத்தூர் என்பவரை பிடித்து விசாரணை மேற்கொண்டு, சந்தேகத்தின் பேரில் மேற்படி நபரை சோதனை செய்தபோது, அவரிடமிருந்து சுமார் 8 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. இதனையடுத்து எதிரியை கைது செய்து மேற்கொண்ட விசாரணையில், ஒடிசா மாநிலத்திலிருந்து கஞ்சாவை விற்பனைக்காக வாங்கி வந்தது தெரியவந்தது. இதனைத்தொடர்ந்து எதிரி மீது அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டனர்.



# தூத்துக்குடி ஸ்டெர்லைட் துப்பாக்கி சூடு சம்பவத்தின் 8ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி அனுசரிப்பு

தூத்துக்குடி:மே,23-

தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டத்தின் போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் உருவப் புகைப்படதிற்கு மெழுகுவத்தி ஏந்தி, மலர்கள் துவி, மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. கடந்த 2018 ஆம் ஆண்டு மே 22ம் தேதி ஸ்டெர்லைடுக்கு எதிரான நடந்த போராட்டத்தில் 7 பேர் நடத்திய துப்பாக்கி சூட்டில் 13 பேர் உயிரிழந்தார் நூற்று கணக்கானோர் காயமடைந்தனர்.இந்த சம்பவத்தில் 8ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி தூத்துக்குடி பாத்திமா நகர் தேவாலயம் சார்பில் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். புதிதாக பொறுப்பு ஏற்றுள்ள அரசு இந்த துப்பாக்கி சூட்டிற்கு காரணமான காவல் துறை அதிகாரிகள் மீதும் மற்றும் வருவாய் துறை மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.மேலும் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தவர்களின் நினைவாக மணிமண்டபம் அமைக்க வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளனர்

# குன்னூர் அருகே காட்டேரி பூங்காவில் 2வது மலைப்பயிர்கள் காட்சி




குன்னூர் மே 23-

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் கோடை விழாவை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்களை மகிழ்விக்கும் நோக்கில் பல்வேறு காட்சிகள் தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை மூலமாக நடத்தப்படுகிறது. இதனை தொடர்ந்து 2வது மலைப்பயிர்கள் காட்சி 22.05.2026நேற்று காட்டேரி பூங்காவில் துவக்கி வைக்கப்பட்டது. இவ்வாண்டு மலைப்பயிர்கள் காட்சியின் கருப்பொருளாக கடலோர பகுதிகளை சார்ந்து வாழும் மீனவ பெண்களின் முக்கியதுவத்தை பறைசாற்றும் விதமாக கடல்சார் வாழ்வியல் காட்சிபடுத்தப்பட்டுள்ளது. தேயிலை, காப்பி, வெற்றிலை, முந்திரி, தென்னை, பனை, கோகோ, எண்ணெய்பனை,பாக்கு மற்றும் நுங்கு போன்ற 10 வகை மலைப்பயிர்களை கொண்டு படகில் மீனவ பெண் (Boat with woman), நங்கூரம் மற்றும் துடுப்பு (Anchor and Oar), (Conch),(Light House), தமிழ்நாடு கடலோர பகுதிகள் வரைப்படம் (Tamilnadu Coastal Map) போன்ற கடல் சார்ந்த பல்வேறு சிறப்பு. உருவ அமைப்புகள் மலைப்பயிர்களை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தோட்டக்கலைத்துறை சார்பாக அரங்கு மற்றும் தனியார் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மலைப்பயிர்கள் காட்சியினை முன்னிட்டு தேயிலை பயிரிடும் விவசாயிகளுக்கென பிரத்யேகமாக 4 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு நிறைவு நாளன்று பரிசுகள் வழங்கப்படவுள்ளது.

மலைப்பயிர்கள் காட்சி 22.05.2026 முதல் 24.05.2026 வரை மூன்று நாட்கள் நடைபெற உள்ளதால் சுற்றுலா பயணிகள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் வருகை புரிந்து நீலகிரி மாவட்டத்தின் மற்றொரு மகுடமாக திகழும் மலைப்பயிர்கள் காட்சியினை கண்டு ரசிக்குமாறு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.இந்த விழாவில் தோட்டகலை துறை இணை இயக்குநர் நவநீதா குன்னூர் சிம்ஸ்பார்க் உதவி இயக்குநர் விஜயலக்ஷ்மி காட்டேரி பார்க் தோட்டகலை மேலாளார் குன்னூர் சிம்ஸ்பூங்கா மேலாளர் உட்பட தோட்டகலை துறை அலுவலர்கள் சுற்றுலா பயணிகள் கலந்து கொண்டனர்

# சிவகங்கை மாவட்டத்தில் கழகம் வளர்த்த தளகர்த்தர் பசும்பொன் தா.கிருட்டிணன் நினைவேந்தல்...முன்னாள் எம்எல்ஏக்கள் தமிழரசி ரவிக்குமார். சுப.மதியரசன் . மாரியப்பன் கென்னடி . சி.ஆர்.எஸ் . குணசேகரன் . மற்றும் நகர மன்ற தலைவர்துரை ஆனந்த் பங்கேற்பு



மானாமதுரை மே,23-

சிவகங்கை மாவட்டத்தில் திமு கழகத்தை வளர்த்தெடுத்த தளகர்த்தர்களுல் ஒருவரான மேனாள் அமைச்சர் பசும்பொன். தா.கிருட்டிணன் எனும் தா.கியார் ஆவார்..இவர் மானாமதுரை வட்டம் கொம்புக்காரனேந்தல் கிராமத்தில் தாண்டவன் சேர்வை கருப்பாயி அம்மாள் இருவருக்கும் 18.5.1937 அன்று மூத்த மகனாகப் பிறந்தவர் தான் இந்த தா.கிருட்டிணன் ..சிறுவயது பள்ளிப் படிப்பை முடித்து பின்னர் சிவத்தலமாகும் மன்னர் துரைச் சிங்கம் கலைக் கல்லூரியில் இண்டர் மீடியேட் படித்து அதன்பின் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் எம்ஏ பொருளாதார படித்த முதுகலை பட்டதாரியாவார்...ஆரம்ப காலத்திலேயே தந்தை பெரியார். பேரறிஞர் அண்ணா. முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோரது பகுத்தறிவு சிந்தனைகளையும் திராவிட கோட்பாடுகளையும் உள்வாங்கியதன் விளைவாக திமுக மேடைகளில் சொற்பொழிவாற்றியதைக் கேட்டு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் இவரை நேரில் அழைத்து பாராட்டியது குறிப்பிடத்தக்கது..அதோடு மட்டுமல்லாமது பெருந்தலைவர் காமராஜர் இவரை நேரிடையாக பாராட்டியதும் உண்டு... சிவகங்கை கல்லூரி காலத்தில் தம்மை மாணவர் திமுக வில் இணைந்து பணியாற்றினார்... பிறகு மானாமதுரை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப்பணியோடு மக்கள் பணிகளையும் திறம்படயாற்றியவர் .1967 முதல் 1977 வரை சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினராக திறம்படச் செயலாற்றியவர் ..பின்னர் நாடாளுமன்ற மேலவைக்கு 1990 ல் கலைஞர் அவர்களால் நியமனம் செய்யப் பட்டு தொடர்ந்து ஏழு ஆண்டுகள் திறம்படச் செயலாற்றியவர்... அதன்பின்னர் 1996 ல் சட்டமன்ற பொதுத் தேர்தலில் சிவகங்கை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று கலைஞர் அமைச்சரவையில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சராக பணியாற்றினார்... சிவகங்கை மாவட்டத்தில் திமு கழகத்தை வளர்த்தெடுத்த தளகர்த்தர்களான சேது நாட்டு செல்லக்கிளி கோட்டியூர் எஸ்.எஸ். தென்னரசு . மேனாள் அமைச்சர் செ.மாதவன் . தா.கிருட்டிணன் மிகவும் முக்கியமானவராவார்... திமுக வின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 17 ஆண்டுகாலம் தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினராக திறம்படச் செயல்பட்டவர்...மேலும் கிழக்கு கடற்கரைச் சாலை எனப்படும் ஈசிஆர் சாலை அமைவதற்கு அடித்தளம் இட்டவர் இந்த தா.கிருட்டிணன்குறிப்பாக அன்னை இந்திரா காந்தி அவர்களால் பாம்பன் இராமேஸ்வரம் இரயில்வே மேம்பாலம் அருகே தார்ச்சாலையுடன் கூடிய மேம்பாலம் அமைவதற்கு காரணமும் இந்த தா.கிருட்டிணன் தான்.. இவரை நாடாளுமன்றத்தில் அப்போதைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் மிஸ்டர் பாம்பன் கிருஷ்ணன் என்ற அடைமொழி தந்து அழைத்தார் ...அதேபோல் தாம் நெடுஞ்சாலை துறை அமைச்சராக இருந்த மூன்றாண்டுகள் காலத்தில் பட்டி தொட்டி முழுவதும் தமிழகமெங்கும் தார்ச்சாலை அமைந்ததால் தார்ச்சாலை தா.கியார் என்றே தொண்டர்கள் பாசத்தோடு அழைத்தனர். அந்த வகையில் தான் பொறுப்பேற்ற பதவிகளில் முத்திரை பதித்த தா . கிருட்டிணன் தான் பாராளுமன்ற உறுப்பினராக தேர்வு பெற்றதையடுத்து தேவர் பிறந்த பசும்பொன் மாவட்டத்தில் வந்தவர் என்பதால் பாராளுமன்ற பதிவேட்டில் பசும்பொன் தா.கிருட்டிணன் என்று பெயரை பதிவு செய்து நாடு முழுவதும் பசும்பொன் தா.கி. என்றே அழைக்கப்பட்டார். இவரை கலைஞர் தனது நெஞ்சுக்கு நீதி புத்தகத்தில் பாரதத்து கிருட்டிணன் போல மிசா காலத்தில் எனக்கு பசும்பொன் தா.கிருட்டிணன் என்றே குறிப்பிட்டுள்ளார்...

இன்றைய நமது கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் வளர்ச்சிக்கும் அவர் கழகத்தின் தலைமைக்கும் வரவேண்டும் என்று தொடர்ந்து உழைத்து களம் கண்ட போராளி ...திமுக தொண்டர்களால் திராவிடத் தென்றல் என்று அன்போடு அழைக்கப்பட்டவராவார்... பெரும் புகழுக்குச் சொந்தக்காரரான பசும்பொன் தா.கிருட்டிணன் படுகொலைச் செய்யப் பட்டு கடந்த 20.5.2003 அன்று உயிரிழந்தார்...இந்த துக்ககரமான நிகழ்ச்சியை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட திமுக வானது பசும்பொன் தா.கிருட்டிணன் குடும்பத்தினர் இணைந்து மாவட்டக் கழக நிகழ்ச்சியாக நடத்தி வருகிறது...23 வது நினைவுதினத்தை முன்னிட்டு கொம்புக்காரனேந்தல் கிராமத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்...பசும்பொன் தா.கிருட்டிணனின் உடன்பிறந்த இளைய சகோதரரும் . திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினருமான தா.ராமையா . கிருட்டிணனின் மகன் தொல்காப்பியன் மற்றும் மகள் மருத்துவர் தேம்பாவணி . மாவட்ட இளைஞரணி மேனாள் துணை அமைப்பாளர். கொம்புக்காரனேந்தல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க மேனாள் தலைவர் . மாவட்ட திமுக பிரதிநிதி தா.ரா.நெடுஞ் செழியன். ஆகியோரது முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற முன்னாள் அமைச்சர் ஆ.தமிழரசி ரவிக்குமார் . (முன்னாள் எம்எல்ஏ) மானாமதுரை முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் லதா அண்ணாதுரை இளையான்குடி ஒன்றிய செயலாளர் சுப.மதியரசன் . மானாமதுரை நகர்மன்றத் தலைவர் எஸ். மாரியப்பன் கென்னடி. புலவர் செவந்தியப்பன் . காரைக்குடி வணக்கத்திற்குரிய மேயர். நா.குணசேகரன் . சிவகங்கை நகர் மன்றத் தலைவர் நகரச் செயலாளர் சி.எம்.துரை ஆனந்த் . ஆகியோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்...பச்சேரி வள்ளல் சமூக ஆர்வலர் சி.ஆர்.சுந்தரராஜன் . மாநில திமுக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் முனைவர் தமிழ்ப்ரியா வேங்கை பிரபாகரன் . மாநில மாற்றுத் திறனாளிகள் அணி மாநில இணைச் செயலாளர் கவுன்சிலர் புஷ்பராஜ் . அரசு ஊழியர்கள் சங்க மேனாள் மாநிலத் தலைவர் சண்முகராஜன் . ஒன்றிய செயலாளர்களான வழக்கறிஞர் அண்ணாதுரை . ஆறு.செல்வராஜன் . வழக்கறிஞர் பூபாளசிங்கம் . திருமலை. முத்துராமலிங்கம் . கா.வெங்கட்ராமன் . கண்டாங்கிபட்டி பெ.மந்தக்காளை . துரை .இராஜாமணி . வே.தமிழ்மாறன். நகரச் செயலாளர் க.பொன்னுச்சாமி . யோக. இருஷ்ணகுமார் . ஏனாதி கடம்பசாமி . முத்துச்சாமி . பூமணி. கழக மூத்த வழக்கறிஞர்களான நகர் முன்னாள் செயலாளர் ஆதி.அழகர்சாமி . வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பாஸ்கரன் . வைஸ் சேர்மன்களான வழக்கறிஞர் ம.கார்கண்ணன் . பாலசுந்தரம் . தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் கு.இராஜாங்கம். . மாவட்ட திமுக நிர்வாகிகளான மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன். எஸ்.எஸ்.ஏ.வல்லபாய் . இடைக்காட்டூர் ஆ.மு.சண்முகநாதன். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்களான எஸ்.எம்.மதிவாணன் . கிங் கார்த்திக் . தலைமைக் கழக பேச்சாளர் நெட்டூர் அய்யாசாமி. மீனவரணி பாஸ்கரன் . வெள்ளிக் கட்டி அன்பழகன் . துணைச் செயலாளர் பெரியசாமி . சக்கந்தி காஜா மைதீன் . மார்கரேட் கமலா பத்தினாதன் . வளர்மதி கலைச்செல்வன் . கவுன்சிலர் சண்முகப்ரியா . பாக்ய லெட்சுமி விஜயகுமார் . ஒமேகா திலகவதி கண்ணன். வழக்கறிஞர் பில்லூர் கார்த்திக். மதகுபட்டி அனீபா . அவைத் தலைவர் மலைமேகு. மாவட்ட விவசாய அணி சொக்கனாதிருப்பு சேகர் . அச்சங்குளம் முருகன். முனைவர் இளங்கோவன் . ஐடி விங் கி.கண்ணன் . வில்லிப்டி பண்ணையார் இராமமூர்த்தி ஆ. சோழபுரம் மாரி . கட்டாணிபட்டி பிரபாகரன் . வீரகாளை . நகரப் பொருளாளர் மயில்வாகனம். கருணாகரன் . நாகநாதர் நாச்சியப்பன் . கவுன்சிலர் துபாய் காந்தி சோம.சதீஷ்குமார். இளைஞரணி அழகு சுந்தரம் . வேங்கை சுந்தர். வேங்கை பாண்டி . சிவனேசன் . பெரிய கண்ணனூர் இளங்கோவன் . அறங்காவலர் பச்சேரி அழ.கணேசன் . செம்புக் குட்டி . கோபிக்கண்ணன் . தெற்கு கீரனூர் இளைஞரணி ராஜா . சீனிக்குட்டி . பரத்குமார் . சிவாஜி . விவசாயி திருமலை அய்யனார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்..நிகழ்ச்சி ஏற்பாடுகளை பசும்பொன் தா.கிருட்டிணன் குடும்பத்தினர் மிகவும் சிறப்பாக செய்திருந்தனர்... இவரது இழப்பு சிவகங்கை மாவட்ட திமுகவினருக்கு ஓர் மாபெரும் இழப்பாகவே இன்றளவும் பேசப்பட்டு வருகிறது என்பதே நிதர்சனமான உண்மையாகும்...

## இலவச அமரர் ஊர்திக்கு வழிவிடுவதில் தகராறு: முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவியின் கணவருக்கு அரிவாள் வெட்டு



மானாமதுரை மே,23-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா பச்சேரி கிராமத்தில் இலவச அமரர் ஊர்திக்கு வழிவிடுவதில் ஏற்பட்ட தகராறு காரணமாக, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவியின் கணவர் மெய்யானமூர்த்தி (47) மீது 5 பேர் கொண்ட கும்பல் அரிவாளால் தாக்குதல் நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.கடந்த சில நாட்களுக்கு முன்பு உயிரிழந்த ஒருவரின் உடலை இலவச அமரர் ஊர்தியில் கொண்டு வந்தபோது, ராம்குமார், அரவிந்த், அண்ணாமலை, குணா, முத்துராஜா ஆகியோர் வழிவிடாமல் சென்றதாக கூறப்படுகிறது. இதை மெய்யானமூர்த்தி தட்டிக்கேட்டதால் இரு தரப்பினருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது.இந்த முன்விரோதம் காரணமாக, கடந்த 18ஆம் தேதி மாலை பச்சேரி சுடுகாடு அருகே நின்றிருந்த மெய்யானமூர்த்தியை ஐந்து பேரும் தாக்கியுள்ளனர். இதில் ராம்குமார் அரிவாளால் தலையில், அரவிந்த் இடது கையில், அண்ணாமலை வலது கை விரலில் வெட்டியதாக கூறப்படுகிறது. மேலும் குணா மற்றும் முத்துராஜா தாக்கியதுடன், கொலை மிரட்டலும் விடுத்து தப்பியோடியுள்ளனர். காயமடைந்த மெய்யானமூர்த்தி முதலில் சிவகங்கை அரசு மருத்துவமனையிலும், பின்னர் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார். புகாரின் பேரில் திருப்பாச்சேத்தி போலீசார் ஙிழிஷி சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடன் உள்ளனர்.



## "மருத்துவ அதிசயம்: கணையப் புற்றுநோயிலிருந்து 78 வயது முதியவரை காப்பாற்றிய மதுரை அப்போலோ!"

மதுரை, மே,23-

. அப்போலோ மருத்துவமனையில் மருத்துவ உலகில் புதிய சாதனையாக, கணையப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 78 வயது முதியவருக்கு அதிநவீன "மைக்ரோவேவ் அப்லேஷன்" (Microwave Ablation - MWA) சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது. இராஜபாளையத்தைச் சேர்ந்த முதியவர் சிறுநீர் நிறமாற்றம், பசியின்மை மற்றும் உடல் எடை குறைவு போன்ற அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பரிசோதனைகளில் அவருக்கு கணையத் தலைப்பகுதியில் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து குடலியல், கதிரியக்கவியல், இருதயவியல், நுரையீரல் மற்றும் மயக்கவியல் உள்ளிட்ட பல்துறை மருத்துவ நிபுணர்கள் இணைந்து சிகிச்சை அளித்தனர். "பிலியோ டைஜெஸ்டிவ் பைபாஸ்" அறுவை சிகிச்சையுடன், "இன்ட்ராஆப்பரேட்டிவ் மைக்ரோவேவ் அப்லேஷன்" தொழில்நுட்பம் பயன்படுத்தி கட்டி வெற்றிகரமாக அழிக்கப்பட்டது.இந்த நவீன சிகிச்சை முறையில் வெப்ப ஆற்றல் மூலம் புற்றுநோய் செல்கள் மட்டும் துல்லியமாக அழிக்கப்படுவதால், சுற்றியுள்ள ஆரோக்கிய திசுக்கள் பாதுகாக்கப்படுகின்றன. மேலும், குறைந்த வலி, விரைவான குணமடைதல் மற்றும் மருத்துவமனையில் குறைந்த நாட்கள் தங்குதல் போன்ற பல நன்மைகள் உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.இந்தச் சாதனையின் மூலம் தென் தமிழகத்தில் புற்றுநோய் சிகிச்சையில் Apollo Speciality Hospital தனது முன்னணி இடத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. மேலும் செய்தியாளர்கள் சந்திப்பில் மருத்துவ நிபுணர்கள் டாக்டர் K. பிரவீன் ராஜன், இணை இயக்குநர் – மருத்துவச் சேவைகள், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, டாக்டர் M. அப்துல் காதர், மூத்த மயக்கவியல் நிபுணர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, டாக்டர் நிகில் திவாரி, தலைமை செயல் அதிகாரி – அப்போலோ மருத்துவமனைகள், மண்டலம்டாக்டர் ரோகிணி ஸ்ரீதர், மருத்துவச் சேவைகள் தலைவர் – மருத்துவமனைகள் பிரிவு, அப்போலோ குழுமம்டாக்டர் P. ராஜேஷ் பிரபு, மூத்த இரைப்பை குடலியல் நிபுணர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, டாக்டர் P. சோபனா, மருத்துவச் சேவைகள் தலைவர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, டாக்டர் ரி. ஙி. சந்தோஷ் பாபு, கதிரியக்க சிகிச்சை நிபுணர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, டாக்டர் C. ரவீந்திரன், மயக்கவியல் நிபுணர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, டாக்டர் J. மதுசூதனன், இரைப்பை குடலியல் அறுவை சிகிச்சை நிபுணர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, டாக்டர் A. ஜான் ராபர்ட், கதிரியக்க சிகிச்சை நிபுணர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, டாக்டர் ஸ்ரீனிவாசன் ராமச்சந்திரன், இரைப்பை குடலியல் அறுவை சிகிச்சை நிபுணர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, டாக்டர் V. S. வெங்கடேஷ், இரைப்பை குடலியல் நிபுணர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை மருத்துவர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில், தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்க திட்டம் தொடர்பான ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன், இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) பெரியசாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.




## சிறிய கால அவகாசம் வேண்டும் : பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி பேட்டி

பல்லாவரம் மே. 23-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி த.வெ.க எம்.எல்.ஏ காமாட்சிபல்லாவரம் பகுதியில் வேலைக்கு செல்லும் மக்கள் நேரடியாக புகார் அளிக்க முடியாதவர்களின் வசதிக்காக "Q.R.CODE" அடங்கிய செயலியை அறிமுகபடுத்தினர்,

இதில் " னிஸி.சிளிஞ்ணி" ஸ்கான் செய்தால் அதில் வரும் புகார் மனுவில் மக்கள் தங்களின் அடிப்படை வசதிகள் குறித்து புகார் அளிக்கலாம் என்றார் தற்போது 200க்கும் மேற்பட்ட புகார்கள் வந்துள்ளாதகவும் அவைகள் மீது படிப்படியாக நடவடிக்கை எடுக்கபடும் என்று தெரிவித்தார்,பின்பு பேட்டி அளித்த த.வெ.க பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காமாட்சிஇப்பொழுதான் ஆட்சி அமைந்துள்ளது பல்லாவரம் சட்டமன்ற உட்பட்ட பகுதிகளில் சாலைகளை சீர் செய்வதற்கு சிறிது காலதாமதாகவும்,முக்கியமாக இன்னும் ஆறுமாதங்களில் மழை காலம் என்பதால் அங்காஙகே கொட்டபட்டுள்ள குப்பை குவியல்கள் நிரந்திரமாக அகற்றபடும்,மழை நீர் வடிகால் முழுவதுமாக கட்டி முடிக்கபடும்,மழை நீர் தேங்கமால் இருப்பதை உறுதி செய்வதே என்னுடைய முக்கியமான நோக்கம்,அதை நோக்கி தான் நாங்கள் பயணம் செய்து வருகிறோம்,மேலும் பாதாள சாக்கடையில் தேங்கி உள்ள குப்பைகளால் தான் கழிவு நீர் செல்ல முடியாமல் தேங்கி வருகிறது அவைகளை முறையாக அகற்றி மூடி அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கபடும் என்றார்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161